**<u>கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்</u>**

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் தேதி வியாழக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.432/2025</u>**

(CNR No. TNPB02-001414-2025)

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
குன்னம் காவல் நிலையம்,
குற்ற எண்.801/2021 ... குற்ற முறையீட்டாளர்

/எதிர்/

1. பழனிவேல், வயது 30/2022
த/பெ.கொளஞ்சி
2. கலைசெல்வன், வயது 30/2022
த/பெ. பாலகிருஷ்ணன்,
3. சத்தியமூர்த்தி, வயது 24/2022
த/பெ. ராஜேந்திரன்,
4. செல்லம்மாள், வயது 49/2022
க/பெ. கொளஞ்சி,
5. மாணிக்கம், வயது 25/2022,
த/பெ. ரெங்கசாமி,
கீழப்புளியூர் கிராமம்,
குன்னம் தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.
6. தனபால், வயது 35/2022,
க/பெ. சாமிக்கண்ணு,
7. ரஞ்சித் , வயது 35/2022, (Split up in CC 214/2026)
த/பெ. கொளஞ்சி,
8. ராஜா, வயது 23/2022, (Split up in CC 214/2026)
த/பெ. ராஜேந்திரன்,
9. மோகன்தாஸ், வயது 40/2022, (Split up in CC 214/2026)
10. ராமக்கண்ணு, வயது 45/2022,
த/பெ. பெருமாள்,
11. குமார், வயது 40/2022,
த/பெ. கொளஞ்சி,

**<u>எதிரிகளின் முகவரி</u>**

கிழக்கு தெரு,
பரவை கிராமம்,
குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம். ... எதிரிகள்

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:04 +0530

(11.03.2026 தேதியிட்டு Crl.M.P.No. 305/2026 ன் கீழ் இடப்பட்ட உத்தரவின் அடிப்படையில் இவ்வழக்கிலிருந்து 7, 8, 9 எதிரிகள் மட்டும் பிரித்து எடுக்கப்பட்டு CC 214/2026 வழக்காக நடத்தப்பட்டு வருகிறது.)

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/ RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

| வ. எண் | பொருள் | விவரம் | | |
|---|---|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர் / எதிரிகள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம் | (1, 11 எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். மற்ற எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படவில்லை) | | |
| | | காவலில் வைக்கப்பட்ட தேதி | விடுவிக்கப்பட்ட விவரம் & தேதி | |
| | | A1, A11 – 17.03.2022 | 21.03.2022 | |
| | | A2, A4 | 05.05.2022(AB) | |
| 2. | நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | 29.04.2025 | | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி | இல்லை | | |
| 4. | குவிமுச பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் / எதிரிகளிடம் விசாரிக்கப்பட்ட தேதி | 240 Crpc on<br>நாள் : 26.03.2026 | | |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களின் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம் (இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட) | 1. Crl.M.P.No. 2591 of 2021 Dt : 24.09.2021–156(3) of Cr.P.C–Allowed.<br>2. Crl.M.P.No. 1149 of 2022 Dt : 21.03.2022<br>Crl.M.P.No. 2301 of 2022 Dt : 05.05.2022<br>surrender petition–Accepted.<br>3. Crl.M.P.No. 456 of 2026 Dt :01.04.2026<br>U/s. 320(2) of Cr.P.C–Dismissed.<br>4. Crl.M.P.No. 305 of 2026 Dt :11.03.2026–<br>U/s. 317(2) Cr.P.C–Allowed. | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 01.04.2026 | இல்லை |
| | | அ.சா.2 | 01.04.2026 | இல்லை |
| | | அ.சா.3 | 01.04.2026 | இல்லை |
| | | அ.சா.4 | 01.04.2026 | இல்லை |
| | | அ.சா.5 | 01.04.2026 | இல்லை |
| | | அ.சா.6 | 01.04.2026 | 01.04.2026 |



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:09 +0530

| | | |
|---|---|---|
| 7 | எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b)–இன் கீழ் வினா வினவப்பட்ட தேதி | 09.04.2026 |
| 8. | எதிரிகள் தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்ட/ தோன்றிய விபரம் | 3, 5, 6, 10 எதிரிகள் 03.11.2021 முதல் தலைமறைவாகி 16.03.2026 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்கள். |
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை |

இவ்வழக்கானது 29.04.2025 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள்வரை விசாரணையில் இருந்து வந்து 09.04.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றவியல் பொது வழக்கறிஞர் திரு.சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. கார்த்திக் அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## <u>தீர்ப்புரை</u>

<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

1. புகார்தாரர் திவ்யாவை புகார்தாரர் கணவரும் அவரது சொந்தகாரர்களான எதிரிகளும் சந்தேகப்பட்டு ஒன்று சேர்ந்து கடந்த 10.08.2021ம் தேதி காலை 04.00 மணிக்கு குன்னம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புகார்தாரர் வீட்டில் அத்துமீறி அனைவரும் உள்ளே சென்று கையில் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு திவ்யாவை தரதரவென்று இழுத்து வந்து குன்னம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பரவாய் புத்தர் சிலை அருகே உள்ள கம்பத்தில் இரண்டு கைகளையும் பின்புறம் வளைத்து கருப்பு நைலான் கயிற்றால் கட்டி வைத்து அசிங்கமாக திட்டி கையால் அடித்து திவ்யாவின் மாமியார் செல்லம்மாள் புகார்தாரரை பார்த்து ஏண்டி தேவடியா ஒத்த தேவடியா இவளை கொல்லுங்கடா இவளை விடக்கூடாது என்று கொலை மிரட்டல்விடுத்தும் அதன் தொடர்ச்சியாக சத்தியமூர்த்தி, தனபால், ரஞ்சித் ஆகிய மூவரும் புகார்தாரரை அசிங்கமாக திட்டி, உன்னை என்னைக்கா இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியுள்ளார்கள் என்றும் எனவே 1, 2, 5, 8, 9, 10, 11 எதிரிகளின் செய்கையானது இ.த.ச. 147, 342, 294(b), 323 r/w Sec 4 of TNPHW Ac ஆகிய



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:16 +0530

பிரிவுகளின் கீழும், 3, 6, 7 எதிரிகளின் செய்கையானது இ.த.ச. 147, 342, 294(b), 323, 506(1) r/w Sec 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழும், 4 ஆம் எதிரியின் செய்கையானது இ.த.ச. 147, 342, 294(b), 323, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழும் குற்றம் புரிந்துள்ளதாக குன்னம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207 இன் கீழ் நகல் வழங்குதல்</u>**

2. இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, இந்நீமன்றத்தில் முன்னிலையான 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 இன்படி அரசுத் தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கப்பட்டது.

**<u>குற்றச்சாட்டுக்கள் வனைந்து குற்றம் பற்றி வினவுதல்</u>**

3. இவ்வழக்கின் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, 1, 2, 5, 10, 11 எதிரிகள் மீது இ.த.ச. 148, 342, 294(b), 323 மற்றும் Sec 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழும், 3, 6 எதிரிகள் மீது இ.த.ச. 148, 342, 294(b), 323, 506(1) மற்றும் Sec 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழும், 4 ஆம் எதிரி மீது இ.த.ச. 148, 342, 294(b), 323, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்கள் குறித்து, வினவியபோது 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்</u>**

4. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத்தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :–</u>**

5. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 திவ்யா தனது சாட்சியத்தில் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுடன் தான் பேசிக் கொண்டிருந்தேன் என்றும் அப்போது சிலர் தன்னை அடித்து காயப்படுத்திவிட்டார்கள் என்றும் எதிரிகளின் மீது சந்தேகத்தின் பேரில் அ.சா.ஆ.1 புகார் கொடுத்துவிட்டேன் என்றும் எதிரிகள் தன்னை யாரும் அடிக்கவில்லை என்றும் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான்

RESHMA

Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:23 +0530

போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

6. சம்பவத்தினை கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 தினேஷ் தனது சாட்சியத்தில் சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் அ.சா.1 ஐ யார் அடித்தார்கள் என்று தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

7. சம்பவத்தினை கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.3 கொளஞ்சி தனது சாட்சியத்தில் சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் அ.சா.1 ஐ யார் அடித்தார்கள் என்று தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

8. பார்வைமகஜர் சாட்சியான அ.சா.4 காமராஜ் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள அ.சா.ஆ.2 இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அதில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

9. பார்வைமகஜர் சாட்சியான அ.சா.5 ராஜாராம் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள அ.சா.ஆ.3 முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அதில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

10. அ.சா.6 உண்ணாமலை (தலைமை காவலர்) தனது சாட்சியத்தில் கடந்த 03.11.2021ம் தேதி புகார்தாரர் கனம் நீதிமன்றத்தில் பிரிவு 156(3) கு.வி.மு.சன் கீழ் அ.சா.ஆ.4 தனி புகார் தாக்கல் செய்து அதன் அடிப்படையில் கனம் நீதிமன்றம் உத்தரவின் பேரில் குன்னம் காவல் நிலைய குற்ற எண் 801/2021, சட்டப் பிரிவுகள் 147, 148, 294(b), 307, 324, 354, 365, 448, 506(2), 34 of IPC & Sec 4 of TNPHW Act ன் படி காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் வழக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜாராம், காமராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து அ.சா.ஆ.6 பார்வை மகஜர், அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பின்னர் சாட்சிகள் திவ்யா, சின்னதுரை,

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:28 +0530

தினேஷ், சுப்ரமணி, சுசிலா, கொளஞ்சி, ராஜாராம், காமராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் இவ்வழக்கின் எதிரிகள் சத்தியமூர்த்தி, தனபால், மோகன்தாஸ், ராமக்கண்ணு ஆகியோர் தலைமறைவு குற்றவாளிகளாக இறுதியறிக்கையில் காட்டப்பட்டுள்ளது என்றும் மற்ற எதிரிகளான பழனிவேல், கலைச்செல்வன், செல்லம்மாள், ராஜா, குமார் ஆகியோர்களில் பழனிவேல் மற்றும் குமார் கைது செய்யப்பட்டு அடைப்பு காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் மற்ற எதிரிகள் முன்பிணை பெற்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும் ஆய்வாளரின் விசாரணைகளிலிருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் வாதி திவ்யாவை கம்பத்தில் கட்டி வைத்து அவரது கைகளை கயிற்றினால் கட்டி, அசிங்கமாக திட்டி அடித்து மிரட்டியதாக தெரியவந்ததால் இந்த வழக்கின் சட்டப்பிரிவை 147, 148, 294(b), 307, 324, 354, 365, 448, 506(2), 34 of IPC & Sec 4 of TNPHW Act ன் கீழிருந்து 147, 148, 342, 294(b), 323, 506(2) of IPC & Sec 4 of TNPHW Act ன் கீழ் அ.சா.ஆ.8 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரிகளின் மீது சட்டப் பிரிவுகள் 147, 148, 342, 294(b), 323, 506(2) of IPC & Sec 4 of TNPHW Act ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

**<u>குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் வினவுதல்</u>**

11. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.தொ. பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகளிடம் விளக்கிக் கூறி வினவியபோது 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் அவற்றை மறுத்துரைத்துள்ளனர். மேலும் எதிரிகள் தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>அரசுத் தரப்பு வாதம்</u>**

12. அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாட்சியங்களின் அடிப்படையில் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:32 +0530

**<u>எதிரிகள் தரப்பு வாதம்</u>**

13. இதனை மறுத்து எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரர், கேள்விப்பட்ட சாட்சிகள், பார்வைமகஜர் சாட்சிகள் என அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகள் ஆகிவிட்டார்கள் என்றும், 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் யாரும் அளிக்கவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

14. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**

15. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. புகார்தாரர் திவ்யாவை புகார்தாரர் கணவரும் அவரது சொந்தகாரர்களான எதிரிகளும் சந்தேகப்பட்டு ஒன்று சேர்ந்து கடந்த 10.08.2021 ம் தேதி காலை 04.00 மணிக்கு குன்னம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புகார்தாரர் வீட்டில் அத்துமீறி அனைவரும் உள்ளே சென்று கையில் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு திவ்யாவை தரதரவென்று இழுத்து வந்து குன்னம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பரவாய் புத்தர் சிலை அருகே உள்ள கம்பத்தில் இரண்டு கைகளையும் பின்புறம் வளைத்து கருப்பு நைலான் கயிற்றால் கட்டி வைத்து அசிங்கமாக திட்டி கையால் அடித்து திவ்யாவின் மாமியார் செல்லம்மாள் புகார்தாரரை பார்த்து ஏண்டி தேவடியா ஒத்த தேவடியா இவளை கொல்லுங்கடா இவளை விடக்கூடாது என்று கொலை மிரட்டல்விடுத்தும் அதன் தொடர்ச்சியாக சத்தியமூர்த்தி, தனபால், ரஞ்சித் ஆகிய மூவரும் புகார்தாரரை அசிங்கமாக திட்டி, உன்னை என்னைக்கா இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியுள்ளார்கள் என்றும் அரசுத் தரப்பு வழக்கு அமைந்துள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் 1, 2, 3 எதிரிகள் செய்யவில்லை என்றும், அரசுத் தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரிகளை விடுதலை செய்ய

வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் பின்வருமாரு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

**இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 148–ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :**

16. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீது புகார்தாரருக்கு எதிராக கலகம் விளைவிக்கும் நோக்கத்தோடு கையில் ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக கூடியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 148–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1 க்கு எதிராக கையில் ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக கூடியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 148–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :**

17. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீது பொது இடத்தில் வைத்து புகார்தாரரான அ.சா.1 ஐ ஆபாசமாகத் திட்டியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 294(பி)–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 ஐ எதிரிகள் பொது இடத்தில் மற்றவர்களுக்கு தொந்தரவு தரும் வகையில் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 342–ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :**

18. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீது புகார்தாரர் திவ்யாவின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:43 +0530

இ.த.ச.பிரிவு 342–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1 ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அ.சா.1 ஐ சட்டவிரோதமாக அடைத்து வைத்ததாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 342–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டம் 323 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

19. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் புகார்தாரரை கையால் குற்றமுறு எண்ணத்துடன் அடித்து சொற்பக்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் அ.சா.1 ஐ தாக்கி சொற்பக்காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 506(1) பிரிவின் கீழான குற்றச்சாட்டுகள் குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

20. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் 3, 4, 6 எதிரிகள் புகார்தாரரை குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக 3, 4, 6 எதிரிகள் மீது இ.த.ச.506(1) பிரிவின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் 3, 4, 6 எதிரிகள் அ.சா.1 ஐ குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 3, 4, 6 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:49 +0530

**<u>இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 –ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும்:</u>**

21. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3, 5, 6, 10, 11 எதிரிகள் அ.சா.1 ஐ பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அவருக்கெதிராக குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் புகார்தாரரான அ.சா.1 க்கு எதிராக பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக எதுவும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 5, 6, 10, 11 எதிரிகள் மீதான தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 – இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

23. முடிவில், 1, 2, 5, 10, 11 எதிரிகள் மீதான இ.த.ச. 148, 342, 294(b), 323 மற்றும் Sec 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும், 3, 6 எதிரிகள் மீதான இ.த.ச. 148, 342, 294(b), 323, 506(1) மற்றும் Sec 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும், 4 ஆம் எதிரி மீதான இ.த.ச. 148, 342, 294(b), 323, 506(1) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும் அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், 1, 2, 3, 4, 5, 6, 10, 11 எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கு வழக்குச் சொத்து எதுவும் இல்லை என்பதால் அதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

RESHMA

Judicial Magistrate,
Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:54 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 09.04.2026 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:25:59 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**I. அரசுத் தரப்பு சாட்சிகள் :–**

1. அ.சா.1 – திவ்யா
2. அ.சா.2 – தினேஷ்
3. அ.சா.3 – கொளஞ்சி
4. அ.சா.4 – காமராஜ்
5. அ.சா.5 – ராஜாராம்
6. அ.சா.6 – உண்ணாமலை(தலைமைக்காவலர்)

**II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :–**

1. அ.சா.ஆ.1 – தனிக்குற்ற புகாரில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்
2. அ.சா.ஆ.2 – பார்வைமகஜரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம்
3. அ.சா.ஆ.3 – பார்வைமகஜரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம்
4. அ.சா.ஆ.4 – தனிப்புகார்
5. அ.சா.ஆ.5 – முதல் தகவல் அறிக்கை
6. அ.சா.ஆ.6 – பார்வைமகஜர்
7. அ.சா.ஆ.7 – மாதிரிவரைபடம்
8. அ.சா.ஆ.8 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**III. அரசுத் தரப்பு சான்று பொருள் :–** இல்லை

**IV.எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :–** இல்லை

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:26:04 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

<u>குறிப்பு</u>

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:26:09 +0530

As per Rule 106 of Criminal Rules of Practice

| S. No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | Kunnam PS, Cr.No.801/2021 U/S. 148, 294(b), 342, 323, 506(1) IPC and Sec 4 of TNPHW Act | Name | A1 - Palanivel | Occurrence | 10.08.2021 | - |
| | | Father's Name | Kolanji | Complaint | 03.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | 17.03.2022 | |
| | | Residence | East street, Paravai village, Kunnam Taluk, Perambalur District. | Release on bail | 21.03.2022 | |
| | | Age | 30/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 01.04.2026 | |
| | | | | Closure of Trial | 01.04.2026 | |
| | | | | Sentence or Order | 09.04.2026 | |
| 2. | Kunnam PS, Cr.No.801/2021 U/S. 148, 294(b), 342, 323, 506(1) IPC and Sec 4 of TNPHW Act | Name | A2 - Kalaiselvan | Occurrence | 10.08.2021 | |
| | | Father's Name | Balakrishnan | Complaint | 03.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | East street, Paravai village, Kunnam Taluk, Perambalur District. | Release on bail | 05.05.2022 (AB) | |
| | | Age | 30/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 01.04.2026 | |
| | | | | Closure of Trial | 01.04.2026 | |
| | | | | Sentence or Order | 09.04.2026 | |
| 3. | Kunnam PS, Cr.No.801/2021 U/S. 148, 294(b), 342, 323, 506(1) IPC and Sec 4 of TNPHW Act | Name | A3 - Sathiyamoorthy | Occurrence | 10.08.2021 | |
| | | Father's Name | Rajendran | Complaint | 03.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | East street, Paravai village, Kunnam Taluk, Perambalur District. | Release on bail | - | |
| | | Age | 24/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 01.04.2026 | |
| | | | | Closure of Trial | 01.04.2026 | |

RESHMA
Judicial Magistrate,
Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:26:14 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Sentence or Order | 09.04.2026 | |
| 4. | Kunnam PS, Cr.No.801/2021 U/S. 148, 294(b), 342, 323, 506(1) IPC and Sec 4 of TNPHW Act | Name | A4 - Chellammal | Occurrence | 10.08.2021 | |
| | | Husband’s Name | Kolanji | Complaint | 03.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | East street, Paravai village, Kunnam Taluk, Perambalur District. | Release on bail | 05.05.2022 (AB) | |
| | | Age | 49/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 01.04.2026 | |
| | | | | Closure of Trial | 01.04.2026 | |
| | | | | Sentence or Order | 09.04.2026 | |
| 5. | Kunnam PS, Cr.No.801/2021 U/S. 148, 294(b), 342, 323, 506(1) IPC and Sec 4 of TNPHW Act | Name | A5 - Manickam | Occurrence | 10.08.2021 | |
| | | Father's Name | Rengasamy | Complaint | 03.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | Keelapuliyur village, Kunnam Taluk, Perambalur District. | Release on bail | - | |
| | | Age | 25/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 01.04.2026 | |
| | | | | Closure of Trial | 01.04.2026 | |
| | | | | Sentence or Order | 09.04.2026 | |
| 6. | Kunnam PS, Cr.No.801/2021 U/S. 148, 294(b), 342, 323, 506(1) IPC and Sec 4 of TNPHW Act | Name | A6- Dhanapal | Occurrence | 10.08.2021 | |
| | | Father's Name | Samykannu | Complaint | 03.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | East street, Paravai village, Kunnam Taluk, Perambalur District. | Release on bail | - | |
| | | Age | 35/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 01.04.2026 | |
| | | | | Closure of Trial | 01.04.2026 | |
| | | | | Sentence or Order | 09.04.2026 | |
| 7. | Kunnam PS, Cr.No.801/2021 U/S. 148, 294(b), 342, 323, 506(1) IPC and Sec 4 of TNPHW Act | Name | A10 - Ramakannu | Occurrence | 10.08.2021 | |



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:26:21 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | Father's Name | Perumal | Complaint | 03.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | East street, Paravai village, Kunnam Taluk, Perambalur District. | Release on bail | - | |
| | | Age | 45/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 01.04.2026 | |
| | | | | Closure of Trial | 01.04.2026 | |
| | | | | Sentence or Order | 09.04.2026 | |
| 8. | Kunnam PS, Cr.No.801/2021 U/S. 148, 294(b), 342, 323, 506(1) IPC and Sec 4 of TNPHW Act | Name | A11- Kumar | Occurrence | 10.08.2021 | |
| | | Father's Name | Kolanji | Complaint | 03.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | 17.03.2022 | |
| | | Residence | East street, Paravai village, Kunnam Taluk, Perambalur District. | Release on bail | 21.03.2022 | |
| | | Age | 40/2022 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 01.04.2026 | |
| | | | | Closure of Trial | 01.04.2026 | |
| | | | | Sentence or Order | 09.04.2026 | |

RESHMA

Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:26:26 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

Judicial Form No.61 (See Rule 106)
IN THE COURT OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

JUDGMENT IN CALENDAR CASE NO. 432 OF 2025

ON THE FILE OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | |
|---|---|
| Complainant | Dhivya |
| Accused | A1. Palanivel, S/o. Kolanji,<br>A2. Kalaiselvan, S/o. Balakrishnan,<br>A3. Sathyamoorthy, S/o. Rajendran,<br>A4. Chellammal, W/o. Kolanji,<br>A5. Manickam, S/o. Rengasamy.<br>A6. Dhanapal, S/o. Samykannu.<br>A10.Ramakannu, S/o. Perumal<br>A11. Kumar, S/o. Kolanji |
| Offence | U/S. 148, 294(b), 342, 323, 506(1) IPC and Sec 4 of TNPHW Act |
| Findings | Acquitted |
| Sentence | -- |

| **Serial Number** | **Description of the Accused** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's/ Husband's Name** | **Caste or race** | **Occupation** | **Residence** | **Age** |
| 1. | Palanivel | Kolanji | Male | Labourar | Paravai | 30/2022 |
| 2. | Kalaiselvan | Balakrishnan | Male | Labourar | Paravai | 30/2022 |
| 3. | Sathyamoorthy | Rajendran | Male | Labourar | Paravai | 24/2022 |
| 4. | Chellammal | Kolanji | Female | Labourar | Paravai | 49/2022 |
| 5. | Manickam | Rengasamy | Male | Labourar | Keelapuliyur | 25/2022 |
| 6. | Dhanapal | Samykannu | Male | Labourar | Paravai | 35/2025 |
| 7. | Ramakannu | Perumal | Male | Labourar | Paravai | 45/2022 |
| 8. | Kumar | Kolanji | Male | Labourar | Paravai | 40/2022 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Occurance** | **Complaint** | **Apprehension or Appearance** | **Release on bail** | **Commencement of trail** | **Closure of trial** | **Sentence or Order** | **Explanation of Delay** |
| 10.08.2021 | 03.11.2021 | 17.03.2022 | 21.03.2022 | 01.04.2026 | 01.04.2026 | 09.04.2026 | - |
| 10.08.2021 | 03.11.2021 | 05.05.2022 | 05.05.2022(AB) | 01.04.2026 | 01.04.2026 | 09.04.2026 | - |
| 10.08.2021 | 03.11.2021 | 16.03.2026 | - | 01.04.2026 | 01.04.2026 | 09.04.2026 | - |
| 10.08.2021 | 03.11.2021 | 05.05.2022 | 05.05.2022(AB) | 01.04.2026 | 01.04.2026 | 09.04.2026 | - |
| 10.08.2021 | 03.11.2021 | 16.03.2026 | - | 01.04.2026 | 01.04.2026 | 09.04.2026 | - |
| 10.08.2021 | 03.11.2021 | 16.03.2026 | - | 01.04.2026 | 01.04.2026 | 09.04.2026 | |
| 10.08.2021 | 03.11.2021 | 16.03.2026 | - | 01.04.2026 | 01.04.2026 | 09.04.2026 | |
| 10.08.2021 | 03.11.2021 | 17.03.2022 | 21.03.2022 | 01.04.2026 | 01.04.2026 | 09.04.2026 | |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.09 17:26:32 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.